சமஷ்டி அரசுத் தேர்தல் விழிப்பு அழைப்பு

# குறைந்த பட்சம் $15 சமஷ்டி அரசுச் சம்பளம் எமக்கு இப்பொழுதே வேண்டும்!

FIGHT FOR $15 & FAIRNESS

தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சம் $15 சமஷ்டி அரசுச் சம்பளமாக நிர்ணயிக்கப்படுவது ஒரு முக்கிய விவகாரமாக சமஷ்டி அரசுத் தேர்தலில் விவாதிக்கப்பட்டு வருகிறது. ஒன்ராறியோ, பிரிட்டிஷ் கொலம்பியா, நோவாஸ்கோஷியா மாகாணங்களிலும் வேறு இடங்களிலும் மேற்கொள்ளப்படும் $15 சம்பளம் மற்றும் நியாயமுறைக்கான பிரச்சாரப் போராட்டத்தில் மக்கள் காட்டும் ஆர்வத்தின் காரணமாக, புதிய ஜனநாயகக் கட்சி மற்றும் பசுமைக் கட்சி ஆகியன சமஷ்டி அரசினால் முறைமைப்படுத்தப் பட்ட தொழில்களில் பணிபுரிவோருக்கு குறைந்த பட்சச் சம்பளமாக $15 வழங்குவோம் என்று வாக்குறுதி அளிக்கும் அளவுக்கு நம்பிக்கை கொண்டுள்ளன.

மக்களில் ஒவ்வொருவரும் கண்ணியமான ஒரு தொழிலில் ஈடுபடவேண்டும் என்பதற்கான போராட்டத்தில், குறைந்தபட்ச சமஷ்டி அரசுச் சம்பளமாக $15 இருக்கும் என்று நிர்ணயிக்கப்படுவது முக்கியமான ஒரு வெற்றியாக இருக்கும். அதுமட்டுமல்லாது இப்படியான ஒரு தீர்மானத்தினால் இந்நாட்டின் ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள தொழிலாளர்கள், ஒரு மணி நேரவேலைக்கு குறைந்த பட்சம் $15 சம்பளமாகப் பெறும் தகைமையைக் கொண்டுள்ளனர் என்ற செய்தியும் பரவலாக்கப்படும். குறைந்தபட்சச் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை கனேடியர்களில் பெரும்பான்மையானோர் ஆதரிக்கின்றனர். நம் தேர்தலில் தெரிவு செய்யும் எமது பிரதிநிதிகளுக்கு இதனை நாம் உணர்த்த வேண்டும். முக்கியமாகச் சமஷ்டி அரசுத் தேர்தலின்பொழுது இது உணர்த்தப்படுதல் வேண்டும்.

வேட்பாளர்கள் உங்கள் வாக்குரிமையைக் கேட்க வரும்பொழுது பின்வரும் கேள்விகளைத் தெளிவாக அவர்களிடம் கேளுங்கள்: முழுநேர வேலை செய்யும் தொழிலாளர்களை வறுமையில் இருந்து விடுவிப்பதற்கு குறைந்தபட்சச் சம்பளம் கைகொடுக்க வேண்டும் என்று உங்கள் கட்சி நம்புகிறதா? ஆம் என்றால் குறைந்த பட்ச சமஷ்டி அரசுச் சம்பளமாக $15 இருப்பதுடன் விலைவாசி உயரும்பொழுது ஒவ்வொரு வருடமும் அதற்கு நிகராக போதிய அளவு இதுவும் உயரவேண்டும் என்ற கருத்தை உங்கள் கட்சி ஆதரிக்கிறதா? குறைந்த பட்ச சமஷ்டி அரசுச் சம்பளமாக $15 இருத்தல் எமக்கு ஏன் அவசியம் என்பது பற்றி அறியத் தொடர்ந்து இதனைப் படியுங்கள்.

## குறைந்த பட்சம் $15 சமஷ்டி அரசுச் சம்பளம் எமக்கு ஏன் தேவை?

குறைந்த பட்சமான சமஷ்டி அரசுச் சம்பளம் 1996ஆம் வருடம் நீக்கப்பட்டது. அதன் பின்னர் இப்பொழுது குறைந்த பட்சமான சமஷ்டி அரசுச் சம்பளம் என்று ஒன்று இல்லை. அச்சம்பளம் நடைமுறையில் இருந்த பொழுது சமஷ்டி அரசு(மாகாண அரசுகள் அல்ல) முறைமைப்படுத்தி (regulated) வருகின்ற பொருளாதாரத் துறைப் பிரிவுகளில் குறிப்பிட்ட சிலவற்றுக்கு அது பிரயோகிக்கப்பட்டு வந்தது. மாகாண எல்லைகளைக் கடந்து செயற்பட வேண்டி இருக்கும் தொழில் துறைப் பிரிவுகளையே இவ்வாறு சமஷ்டி அரசு முறைமைப்படுத்தி வருகிறது. போக்குவரத்துத் துறை, தொடர்பு சாதனத் துறை, மீன்பிடித் துறை, வங்கித் துறை ஆகியவற்றை இத்தகைய தொழில் துறைப் பிரிவுகளுக்குச் சில உதாரணங்களாகக் கூறலாம்.

இப்பொழுது சமஷ்டி அரசு முறைமைப் படுத்தி வருகின்ற தொழில் துறைப் பிரிவுகளில் குறைந்த பட்சமான சம்பளம் பெறுகின்ற தொழிலாளர்கள், அவர்கள் வழக்கமாக வேலை செய்து வருகின்ற மாகாணங்களில் நடைமுறையில் இருக்கும் குறைந்த பட்ச ஊதியத்தையே தமது உழைப்பிற்காகப் பெறுகின்றனர். ஒவ்வொரு மாகாணத்திலும் வழங்கப்படும் குறைந்த பட்சமான சம்பளம், முழுநேர வேலையாட்களை வாட்டும் வறுமையில் இருந்து அவர்களை மீட்கக் கூடிய வருமான அளவிலும் மிகக் குறைவாகவே இருக்கிறது. (அல்பேட்டா மாகாணம் மட்டுமே குறைந்தபட்சமாக $15 சம்பளத்தைப் படிப்படியாகப் புகுத்துவதற்கு வாக்குறுதி அளித்துள்ள போதிலும் அங்கும் 2018 ஆம் ஆண்டு வரையில் அது முழுமையாகக் கிடைக்க மாட்டாது.)

ஒரு மாகாணத்தில் நடைமுறையில் இருக்கும் குறிப்பிட்ட குறைந்த பட்ச சம்பளத் தொகையைக் கருத்தில் கொள்ளாமல், சமஷ்டி அரசின் முறைமைப்பாட்டின் கீழ் தொழில் புரியும் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் ஒரு மணித்தியாலத்துக்கு $15 இலும் குறைவான தொகையையே சம்பளமாகப் பெறுகின்றனர். உதாரணமாக வங்கிகளில் காசு அலுவலர்களாகப் பணியாற்றுவோர் சராசரியாக ஒரு மணி நேரத்துக்கு $13.00 அளவுக்குக் கிட்டியதாகவே சம்பளமாகப் பெறுகின்றனர் என்ற போதிலும் வங்கிகளோ வருடா வருடம் பல பில்லியன் டொலர்களை இலாபமாகப் பெறுகின்றன.

## குறைந்தபட்சமான சமஷ்டி அரசுச் சம்பளம் என்பது ஏன் எல்லோருக்கும் வழங்கப்படுவது இல்லை?

தேசச் சட்டத்தின் பிரகாரம் தொழில் வாய்ப்பு மற்றும் குறைந்த பட்சச் சம்பளம் ஆகியவை சம்பந்தப்பட்ட சட்டங்களுக்குரிய முதன்மைப் பொறுப்பினை மாகாண அரசுகள் (சமஷ்டி அரசு அல்ல) வகிக்கின்றன. சமஷ்டி அரசுக் கட்சி ஒன்று அரசாங்கத்தை அமைக்கும் பொழுது சமஷ்டி அரசுக்குரிய சட்டங்களை மட்டும் மாற்றுவதற்கு அதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. எனவேதான் அரசியல் கட்சிகள் தாம் மாற்றத்தைக் கொண்டுவரும் சட்ட உரிமையை பெற்றிருக்கும் துறைகளில் மட்டும், தெரிவு செய்யப்பட்டால், நேரடியாகச் செயற்படப் போவதாக வாக்குறுதி வழங்க முடிகிறது.

## சமஷ்டி அரசு செயலில் இறங்க வேண்டும்!

இந்த விடயத்தில் சமஷ்டி அரசின் பங்கு மட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறபோதிலும், குறைந்த ஊதியம் பெறும் தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்துவதில் உண்மையாகச் சிரத்தை கொண்டுள்ள ஒரு அரசியல் கட்சி, அந்த இலட்சியத்தை நோக்கி முன்னேறத் தன் கையில் உள்ள ஒவ்வொரு கொள்கைக் கருவியினையும் பயன்படுத்த வேண்டும். குறைந்த பட்சச் சமஷ்டி அரசுச் சம்பளமாக $15 இனை நடைமுறைப்படுத்துவதில் தொடங்கி, கனடிய அரசாங்கத்துடன் சேவைகள் மற்றும் கட்டுமான ஒப்பந்தங்கள் செய்வதற்கு முன்பாக ஒரு நிபந்தனையாக, வர்த்தக நிறுவனங்கள் தமது தொழிலாளர்களுக்கு நியாயமான முறையில் (குறைந்த பட்சம் ஒரு மணித்தியாலத்துக்கு $15) சம்பளம் வழங்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்கும் நியாய ஊதியங்கள் சட்டத்தினை(Fair Wages Act) மீளக் கொணர்ந்து அதனை விரிவாக்குதல் வரை, வெவ்வேறு கொள்கைக் கருவிகளை அக்கட்சி உபயோகிக்க முடியும். மேலும் சமஷ்டி அரசாங்கம் இவற்றை ஒத்த செயற்பாட்டு படிமுறைகளை மாகாணங்களும் எடுக்க வேண்டும் என்று மாகாண அரசுகளுக்கும் தனது அறவழி அதிகாரத்தைக் கொண்டு அழைப்பு விடுக்க வேண்டும்.

சமஷ்டி அரசு இவ்வாறு செய்யும்பொழுது, $15 குறைந்தபட்சச் சம்பளம் மற்றும் நியாயமுறை என்பவற்றுக்காகப் போராடுவது உண்மையில் சரியான ஒரு செய்கைதான் என்கின்ற ஒரு வலிமையான செய்தியை, தொழிலாளர்களுக்கும் அவர்களுக்கு வேலை வழங்குபவர்களுக்கும் அனுப்ப முடியும். கண்ணியமான ஒரு தொழிலை எல்லோருக்கும் கிடைக்கச் செய்யும் போராட்டத்தில் தமது பங்கினைச் செய்யுமாறு மற்றைய மட்டங்களில் உள்ள அரசுகளுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் சமஷ்டி அரசின் இச்செயல் ஊக்கம் அளிக்கும்.

## சமஷ்டி அரசு மட்டத்தில் $15 அளவான குறைந்த பட்ச சம்பளத்தை நாம் வென்று எடுத்தால் மாகாண அரசு மட்டத்தில் அதனை வென்றெடுக்க இது உதவும்

குறைந்த பட்ச சமஷ்டி அரசுச் சம்பளமாக $15 அளவினை நிறுவுதல் வெற்றிகரமான ஒரு சாதனையாக இருப்பதுடன், முழுநேர வேலை செய்யும் எந்தவொரு தொழிலாளியும் வறுமைக் கோட்டின் கீழே வாழும் நிலை இருக்கக் கூடாது என்ற விடயத்தில் கனடா மற்றும் கியூபெக் அடங்கிலும் உள்ள மக்கள் மத்தியில் நிலவும் கருத்து ஒருமைப்பாட்டினை பிரதிபலிப்பதாகவும் அது அமையும். மேலும் இது மாகாணங்களில் உள்ள நிலைமையினை ஒப்பிட்டுக் கணிப்பிட உதவும் நியமம் ஆகவும், மாகாணங்களில் நடைமுறையில் உள்ள குறைந்த பட்ச சம்பளங்களின் தற்போதைய பற்றாக்குறை நிலைமையை வெளிப்படுத்தும் கருவியாகவும் உதவும்.

அதிகுறைந்த மட்டத்தில் சம்பளத்தைப் பெறுகின்ற தொழிலாளர்களின் ஊதியங்களை நாம் உயர்த்தும் பொழுதெல்லாம் மற்றெல்லா மட்டங்களிலும் மேல் நோக்கிய ஓர் அழுத்தத்தை உருவாக்குகிறோம். தாழ்வான மட்டத்தில் மற்றும் குறைந்த பட்ச அளவில் சம்பளம் பெறும் தொழிலாளர்கள் தமது தொழில் வாய்ப்புகளைத் தெரிவு செய்யும்பொழுது தொழில் தெரிவுகள் பரந்த அளவில் இருக்குமானால், அவர்களுக்கு ஒரு தொழிலினைக் கைவிட்டு இன்னுமொரு மேலான தொழிலை எடுப்பதற்குக் கூடுதலான சாத்தியம் இருக்கும். இப்படி ஒரு நிலை ஏற்படும் பொழுது தொழிலாளர்களைப் நிறுத்தி வைத்துக் கொள்வதற்காக அல்லது புது நியமனங்களைக் குறைப்பதற்காக தொழில் வழங்குவோர் தமது தொழிலாளர்களுக்குக் கூடுதலான சம்பளத்தை வழங்கத் தீர்மானிக்கக் கூடும். எனவேதான் குறைந்த பட்ச ஊதியம் பெறும் தொழிலாளர்களுக்கான ஒரு சம்பள உயர்வு, நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பு அடங்கிலும் ஓர் அலையோட்டத்தை ஆரம்பித்து வைக்க முடிகிறது. குறைவான வருமானம் பெறும் தொழிலாளர்களின் விடயத்தில் இது விசேடமாகப் பொருந்தும்.

## கண்ணியமான ஒரு தேசிய நியமம்

குறைந்த பட்ச சமஷ்டி அரசுச் சம்பளமாக ஒரு மணித்தியாலத்துக்கு $15 என்று தீர்மானித்து, வருடந்தோறும் ஏறிக்கொண்டு இருக்கும் பொருள் விலைகளின் அளவிற்கு (நுகர்வோர் விலைச் சுட்டி மூலம் இது அளவிடப்படுகிறது) நிகராக இச்சம்பளம் அதிகரிக்கும் என்று நிறுவப்பட்டால், இதன்மூலம் ஒரு தேசிய நியமம் (national standard) உருவாக்கப்படும். அத்துடன், அது சமஷ்டி அரசு முறைமைப்படுத்தும் தொழில் துறைகளில் பணிபுரியும் குறைவான வருமானம் கொண்ட தொழிலாளர்களின் சம்பளங்களை, வறுமைக் கோட்டின் அளவுக்கு(வரிக்கு முன்பான குறைவான வருமான அளவீடு) மேலே குறைந்த பட்சம் 10% அளவு உயர்த்த முடியும்.

கனடா அடங்கிலும் தனியொரு உயர்நியம முறையிலான குறைந்த பட்சச் சம்பளம் நடைமுறையில் இல்லாத காரணத்தினால், ஒரு மாகாணத்தில் குறித்த ஒரு தொழிலினைச் செய்யும் தொழிலாளர்கள் அதே தொழிலினை வேறொரு மாகாணத்தில் செய்வோரைக் காட்டிலும் குறைந்த சம்பளத்தைப் பெறுவது சாத்தியமாகலாம். இவ்வாறான சம்பள ஏற்றத் தாழ்வுகளின் காரணத்தால் குறைவான வருமானம் கொண்ட தொழிலாளர்கள் சமஷ்டி அரசின் தொழில் காப்புறுதித் திட்டத்தின் மூலம் பெறும் வருமானத் துணையுதவிப் பணத்திலும் இந்த ஏற்றத் தாழ்வினைச் சந்திக்கின்றனர். பிரதேசவாரியாக நிலவும் இந்த நியாயமற்ற இயல்பு, சமஷ்டி அரசின் தொழில் காப்புறுதித் திட்டத்தில் ஏற்கெனவே இருக்கிறது. இதற்குக் காரணம், தொழிலாளர்களின் நலன்களை தொழில் காப்புறுதித் திட்டத்தின் கீழ் கணிப்பதற்கு உள்ளூரில் நிலவும் பொருளாதார நிலைமைக் குறிகாட்டிகளில் அது தங்கியுள்ளது. சம்பளங்கள் பற்றிய விடயத்தில், உயரிய மட்டத்தில் எல்லோருக்கும் கனடா அடங்கிலும் ஒரு நியம அளவுச் சம்பளத்தை நிறுவுதல் மற்றும் சமூகநீதியாக வழங்கப்படும் எல்லா உதவித் திட்டங்களிலும் உயரிய மட்டத்தில் எல்லோருக்கும் என்று நியமங்களைப் பேணுதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்திக் கூறும் முயற்சியில், தொழிலாளர்கள் யாவருமே ஆர்வம் கொண்டுள்ளனர்.

## கண்ணியமான ஒரு குறைந்த பட்சச் சம்பளம் நிறுவுவதன் அடிப்படைக் கோட்பாடுகள்

- தொழிலாளர்களில் எவருமே வறுமையுடன் வாழக் கூடாது.
- குறைந்த பட்சச் சம்பளம் பெறுவோர் பெறுகின்ற ஊதியம், வறுமைக் கோட்டிற்கு (வரிக்கு முன்பான குறைவான வருமான அளவீடு) மேலே குறைந்த பட்சம் 10% ஆயினும் உயர்வாக இருக்க வேண்டும்.
- குறைந்த பட்சச் சம்பளம், ஏறிக் கொண்டு செல்லும் விலைகளுக்கு நிகராக வருடாந்தம் அதிகரிக்க வேண்டும்.
- தொழிலாளர்கள் எல்லோருக்கும் $15 குறைந்த பட்சச் சம்பளம் இப்பொழுதே வேண்டும்!

15andfairness.org

fightfor15andfairness@gmail.com / 416-531-0778 ext. 221

#15andfairness / @fairwagesnow / Campaign to Raise the Minimum Wage

குறைந்த பட்சச் சம்பள உயர்வுக்கான பிரச்சாரம்